இருப்பதற்காகத்தான். அவைகளை, அந்தக் குழு ஆராய்ந்து எடுத்துச் சொல்லுமானால், அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும் சூழ்நிலையில், அங்கே பணிபுரிபவர்கள் செம்மையாகவும், சிறப்பாகவும் பணியாற்ற வழிவகை ஏற்படும். ஒருமுறை கூட்டம் கூடி மறுமுறை அந்தக் கூட்டம் கூட்டப்படாமல் இருப்பது நல்லதல்ல. முறைப்படி கூட்டப்பட வேண்டுமென்று தான் அறிவுரை கூறியிருக்கிறோம். ஆனால், இவ்வளவு நாட்களுக்கு ஒருமுறை கூட்டப்பட வேண்டுமென்ற வரைமுறை எதுவும் வைக்கப்படவில்லை. எனினும், இந்தக் குழு குறிப்பிட்ட கால அளவுக்குள் கூட்டப்பட வேண்டுமென்பது அரசினுடைய நோக்கம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல, இதை நடைமுறைப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப் படும்.

திரு என். பழனிவேல்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ரேஷன் கடைகளிலே புகார் பெட்டிகள் வைப்பதாகச் சொன்னார்கள். அதனால் பிரச்னைத் தீர்ந்து விடாது. இப்பொழுது தாலூகா மட்ட அளவிலே குழு அமைக்கப் பட்டிருக்கிறது. அந்தக் குழுக்களிலே அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள் யாரும் இல்லை. அந்த அதிகாரிக்குத் தெரிந்த, 30 ஆண்டுகளுக்கு முன்பு அறிமுகமான நபர்கள்தான் அந்தக் குழுவிலே உள்ளார்கள். அப்படியில்லாமல், அரசியல் கட்சியைச் சேர்ந்த நபர்களைப் போட்டு தாலூகா மட்டத்தில் அல்லாமல் குறுகிய அளவிலே போட்டால், பார்ப்பதற்கு வசதியாக இருக்கும் (விடை இல்லை.)

சென்னையில் மீன்காட்சி சாலை ஏற்படுத்தும் திட்டம்.

*வினா எண். 22—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் மீன்காட்சி சாலை நடத்த அரசிடம் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மெரினா கடற் கரையில் தற்போது ஒரு மீன்காட்சிசாலை உள்ளது. மேலும் மெரினா கடற்கரையில் ஓசுனேரியம் (oceanarium) என்னும் அமைப்பு ஒன்றை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பாபு ஜனார்த்தனன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீன்காட்சி சாலை மெரினாவில் உள்ளது என்று சொன்னார்கள். சில இடங்களில் மக்களுடைய உணவை நல்லமுறையிலே சுவையாகச் செய்து, விநியோகிக்கின்ற ஸ்டால்கள் இருந்தாலும் அதைப் பரவலாக்க ஏற்பாடு செய்யப் படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, அக்வேரியம் என்று சொல்லப்படுவது மீன்காட்சி சாலை. அதிலே, விதவிதமான, வண்ண வண்ண, வகை வகையா

1983 சனவரி 28]

மீன்கள் பொதுமக்களுடைய காட்சிக்காக வைக்கப்படுகின்றன. நீண்ட நெடுங்காலமாக மெரினா கடற்கரையிலே மீன்காட்சி சாலையிருக்கிறது. அண்மையில், ரூ. 1.18 இலட்சம் செலவில் இது புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. ஓசுனேரியம் என்று சொல்லப்படுவது மீன் மட்டும் அல்ல, கடலில் உள்ள உயிரினங்கள் அத்தனையும் பொதுமக்கள் காட்சிக்காக வைக்கப்படுகின்றன. அப்படிப்பட்ட ஒரு செயற்குறிப்பு அரசுக்கு வந்தது, அது, மெரினா கடற்கரை மேம்பாட்டுத் திட்டங்களுக்கு வகுக்கப்பட்ட சிறப்புக் குழுவினுடைய பார்வைக்கு வைக்கப்பட்டு, அந்தக் குழு இதை நடைமுறைப்படுத்தலாம் என்று சொல்லியிருக்கிறது மீன்துறை இயக்குநர் அவர்களும், தலைமைப் பொறியாளர் அவர்களும், ரூ. 31.5 இலட்சம் செலவாகும் என்று மதிப்பீடு தந்திருக்கிறார்கள். இது அந்தக் குழுவினால் பரிசீலிக்கப் படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மீன் உணவு மக்களுக்கு எளிதாகக் கிடைக்க தேவையான ஸ்டால்கள் வேண்டுமென்றார்கள். சென்னையிலும் முக்கியமான நகரங்களிலும் இத்தகைய ஸ்டால்கள் உள்ளன. அதில், நல்ல வளமான மீன்கள், தனியார் கடைகளைவிடக் குறைந்த விலையில் கிடைக்கும் அளவுக்கு நல்லமுறையில் அவை பணியாற்றி வருகின்றன. அதை விரிவுபடுத்தும் நோக்கமும் அரசுக்கு இருக்கிறது.

(முற்பகல் 9—10)

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் மீன் உணவு மிகவும் சுவையானதாக இருப்பதாகச் சொன்னார்கள். அப்படி என்றால் அவர்கள் சாப்பிட்டு பார்த்து இருக்கிறார்களா? அப்படியில்லை என்றால் அவர்கள் எப்படி சுவையாக இருக்கிறது என்று சொல்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, நான் சாப்பிட்டு பார்த்த காரணத்தால் தான் சுவையாக இருப்பதாகச் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தைரியமாக சாப்பிடலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில் வறுமைக் கோட்டிற்கும் கீழே உள்ளவர்கள் எண்ணிக்கை

*வினா எண். 23—திரு. செ. சிவசாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழகத்தில் வறுமைக் கோட்டிற்கும் கீழே உள்ளவர்களின் எண்ணிக்கை கூடுதலாகி இருக்கிறதா? அல்லது குறைவாகி இருக்கிறதா?